بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** *(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

April 04 2014

**மொழியாக்கம் : மவ்லவி M.B. தாஹிர் அஹ்மது சாஹிப்**

## அல்லாஹ்வின் மீதான உண்மையான அன்பின் சாராம்சம்

***தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இறைநேசம் தொடர்பான எழுத்துக்களையும், மேற்கோள்களையும் எடுத்து வைப்பேன். அதில் அன்னார், இறை அன்பின் உண்மைத்துவம் மற்றும் விளக்கத்தைக் கூறியுள்ளார்கள். அல்லாஹ்வின் அன்பை பெறுவதற்கான இரகசியம், அதன் வழிகள், தத்துவம் மற்றும் அதன் ஆழத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். மேலும் அன்னாரை ஏற்றுக் கொள்ளக்கூடிய மற்றும் அன்னாரது ஜமாஅத்தைச் சேர்ந்த நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள்? மேலும், இறையன்பு தொடர்பாக நமது முயற்சிகள் எவ்வாறிருக்க வேண்டும்? மேலும் என்ன தரம் இருக்க வேண்டும்? போன்ற அனைத்தைப் பற்றியும் கூறியுள்ளார்கள். ஆக, இந்த அடிப்படையில் ஒவ்வொரு ஆதாரமும் சிந்திக்கத்தக்கதும், நமது வழிகாட்டிகளும் ஆகும். எனவே கவனத்துடன் கேட்க வேண்டிய தேவை உள்ளது. அதன் மூலம் இறை அன்பின் கட்டளையைப் புரிந்தவாறு முன்னேறிச் செல்பவராகவும், அதிகமாக்கக் கூடியவர்களாகவும் ஆக வேண்டும். மேலும், சீர்திருத்தம் செய்பவர்களாக ஆக வேண்டும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

அன்பு என்பது செயற்கையாக, காட்டுவதற்காக செய்யப்படும் சம்பிரதாய வேலை அல்ல. மாறாக, மனித ஆற்றல்களில் இதுவும் ஓர் ஆற்றலாகும். இதன் உண்மைத்துவம் என்னவென்றால், உள்ளம் ஒரு பொருளை விரும்பி அதன் பக்கம் ஈர்த்துச் செல்லப்படும் போது, அப்பொருளின் அசல் சிறப்புகள் அதன் முழுமைத்தன்மையுடன் வெளிப்படையான முறையில் உணரப்படுகின்றன. இதுவே அன்பின் நிலையாகும். எப்போது அது முழுமையை அடைகின்றதோ, எல்லையை அடைகின்றதோ அப்போதுதான் அதன் சிறப்புகளும் வெளிப்படுகின்றன.

***அல்லாஹ் கூறுகின்றான்:***

(2:94) اُشْرِبُوْا فِیْ قُلُوْبِهِمُ الْعِجْلَ அதாவது, கன்றுக்குட்டியின் மீதான நேசம் அவர்களிடம் எந்த அளவு இருந்ததென்றால், அவர்கள் அதனை சுவைமிக்க பானத்தைப் போன்று அருந்தினர்.

உண்மையில் ஒரு மனிதர் எப்போது ஏதேனும் ஒன்றோடு முழுமையான அன்பு கொள்கிறாரோ அப்போது அதை அருந்தி விடுவதைப் போன்று ஆகி விடுகிறார் அல்லது அருந்தி விடுகிறார். மேலும், ஒழுக்கத்திலும், நடத்தையிலும் அவர் அதன் ஒத்த நிறமாக மாறி விடுகிறார். எந்த அளவு அதிகமாக அன்பு இருக்குமோ அதே அளவு மனிதன் இயல்பாகவே, தான் நேசிக்கின்றவர்களின் பண்பின் பக்கம் ஈர்த்துச் செல்லப்படுகிறார். எதுவரையென்றால், எதை அவர் நேசிக்கின்றாரோ அதன் உருவாகவே ஆகி விடுகிறார். எவர் இறைவனோடு அன்பு கொள்கிறாரோ அவர் தனது சக்திக்கேற்ப இறைவனிடம் இருக்கும் ஒளியை நிழல் வடிவில் பெற்று விடுகிறார். ஷய்த்தானிடம் அன்பு செலுத்தக் கூடியவர்கள் ஷய்த்தானிடம் இருக்கக்கூடிய இருளைப் பெறுகின்றனர்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இறைவனின் பண்பை மேற்கொள்வதே அன்பின் இரகசியமாகும். மஃரிஃபத் (இறை ஞானம்) தொடர்பாக கூறப்பட்டிருந்தது. எதுவரை அனைத்து பண்புகளைப் பற்றிய ஞானம் இருக்காதோ, அதுவரை மஃரிஃபத்தைப் பெற இயலாது. மஃரிஃபத்திற்குப் பிறகு மனிதன் மேலும் முன்னேறிச் செல்லும் போது இறை அன்பு உருவாகிறது. இறைவனின் பண்புகளை மேற்கொள்ளும்போது தான் அன்பு முழுமையடைகிறது. அல்லாஹ்வைப் பற்றிய அறிவைப் பெறுவது மட்டும் போதுமானதல்ல. மாறாக, அதை மேற்கொள்ளவும் வேண்டும். அல்லாஹ்வின் நிறத்தோடு ஒன்றிய நிறமாகி விட வேண்டும். அப்போது அல்லாஹ்வின் ஒளி கிடைக்கிறது.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

அன்பின் உண்மைத்துவம், மனிதன் உண்மையான உள்ளத்தோடு தான் நேசிக்கக்கூடியவரின் அனைத்து அம்சங்களையும், ஒழுக்கங்களையும் நேசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. மேலும் அதில் தன்னை மாய்த்துக் கொள்வதற்கு உயிர் மூச்சுடன் முயற்சி செய்பவனாக ஆகிவிட வேண்டும். அதன் மூலம் தன் நேசத்திற்குரியவரிடம் தன்னை மாய்த்தவாறு அந்த நேசத்திற்குரியவரிடமிருந்து வாழ்வைப் பெற வேண்டும். உண்மையான அன்பு கொள்ளக்கூடியவர் தன் நேசத்திற்குரியவருள் மாய்ந்து விடுகிறார். தன் நேசத்திற்கு உரியவரிடமிருந்து வெளிப்படுகிறார். மேலும் அதனை குடித்தது போன்று தன்னில் அதன் உருவத்தைப் படம்பிடித்துக் கொள்கிறார். அவனில் ஆகி, அவனுடைய நிறத்தோடு ஒன்றி, அவனுடன் இணைந்து அவர் உண்மையில் அவனுடைய அன்பில் மூழ்கி விட்டார் என்பதை வெளிப்படுத்துகிறார் எனக் கூறப்படுகிறது.

***பிறகு இறை அன்பின் தரத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

பாதிரி ஃபத்தே மஸீஹின் ஆட்சேபனைக்குப் பதில் கூறியவாறு இந்த மேற்கோளை கூறினார்கள்.

முஸ்லிம்கள், நோக்கம் இல்லாமல் இறைவனோடு அன்பு கொள்வதில்லை என்றும், இறைவன் தனது சிறப்புகளின் காரணமாக நேசத்திற்குத் தகுதியானவன் என்று அவர்களுக்கு போதனை வழங்கப்படவில்லை என்றும் ஆட்சேபித்திருந்தார். அதன் பதில் இதுவாகும். உண்மையில் இந்த ஆட்சேபனை திருக்குர்ஆனுக்குப் பொருந்தாது. மாறாக, இஞ்சீலுக்குப் பொருந்தக் கூடியதாகும் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இறைவனோடு தனிப்பட்ட அன்பு கொள்ள வேண்டும்; அந்த தனிப்பட்ட அன்பின் மூலம் அவனை வணங்க வேண்டும் என்ற போதனை இஞ்சீலில் ஒருபோதும் இல்லை. ஆனால் திருக்குர்ஆன் இதுபோன்ற போதனைகளால் நிரம்பி இருக்கிறது. திருக்குர்ஆன் தெளிவாகக் கூறி விட்டது.

(2:201) فَإِذَا قَضَيْتُم مَّنَاسِكَكُمْ فَاذْكُرُوا اللَّهَ كَذِكْرِكُمْ آبَاءَكُمْ أَوْ أَشَدَّ ذِكْرًا

***பிறகு கூறுகிறான்:***

(2:166) وَالَّذِينَ آمَنُوا أَشَدُّ حُبًّا لِّلَّهِ

அதாவது, எவ்வாறு உங்களுடைய மூதாதையர்களை நினைவு கூறுகிறீர்களோ அதுபோன்று இறைவனை நினைவு கூறுங்கள். மாறாக, அதை விட அதிகமாக – எல்லாவற்றையும் விட அதிகமாக இறைவனோடு அன்பு கொள்வதே மூஃமினின் தனிச் சிறப்பாகும். அதாவது எப்படிப்பட்டது என்றால், தன் தந்தையுடனோ, தன் தாயுடனோ, தனது மற்ற அன்பிற்குரியவர்களுடனோ, தன் உயிருடனோ செலுத்தாத அளவு அன்பு செலுத்த வேண்டும்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

(49:8) حَبَّبَ إِلَيْكُمُ الْإِيمَانَ وَزَيَّنَهُ فِي قُلُوبِكُمْ

அதாவது இறைவன் ஈமானை உங்களுடைய நேசத்திற்குரியதாக ஆக்கி விட்டான். மேலும் அதை உங்களது உள்ளத்தின் அலங்காரமாக்கி விட்டான்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

(16:91) إِنَّ اللَّهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَىٰ

இந்த வசனம், இறைவனுக்குரிய உரிமையையும், அடியானுக்குரிய உரிமையையும் உள்ளடக்கி உள்ளது. இந்த இரண்டு விஷயங்களுமே இதன் தனிச் சிறப்பாகும்.

கூறினார்கள்: மனிதருக்குரிய உரிமையைப் பற்றி நாம் கூறி விட்டோம். எவ்வாறிருப்பினும் மனிதருக்குரிய உரிமை பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இவ்வாறு விளக்கியுள்ளார்கள்:

அதாவது, மூஃமின், காஃபிர் மீதும் கருணை காட்ட வேண்டும். இது மனிதர்களுக்குரிய உரிமையாகும். ஆழமாகச் சென்று அவருக்கு கருணை காட்ட வேண்டிய தேவை இருந்தாலும் செய்ய வேண்டும். அவனுடைய ஆன்மீக பௌதீக நோய்களின் துக்கத்தில் பங்கு பெற வேண்டும். அவர் காஃபிராக இருந்தாலும் ஏதேனும் நோயிருந்தால் அது ஆன்மீகமானதாக இருந்தாலும் சரி, பௌதீகமானதாக இருந்தாலும் சரி அவனது துக்கத்தில் பங்கு பெற வேண்டும். இது மனிதர்களுக்குரிய உரிமைகளாகும். இங்கு இதற்கான பதிலும் வந்து விட்டது. அதாவது காஃபிரோடு எவ்வாறு அன்பு காட்ட வேண்டும். நாம் 'எல்லாரிடத்தும் அன்பு' என்று கூறுகிறோம். அப்படியிருக்கையில் இது எவ்வாறு இயலும்? என்று சிலர் ஆட்சேபிக்கின்றனர்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

அன்பு என்பது, அவன் மீது அனுதாபம், அவனை சீர்திருத்துவது, அவனுடைய தேவையை நிறைவேற்றுவது ஆகும். காஃபிருடன் அன்பு எத்தகையது என்றால், அந்த காஃபிரின் விஷயங்கள் அவனது மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு விடுவது அல்ல. ஓர் உண்மையான மூஃமினுடன் அன்பு எப்படிப்பட்டதென்றால், அவனுடைய நல்ல பழக்க வழக்கங்கள், அவனுடைய நன்மைகளை மேற்கொண்டு, அவனில் ஏதேனும் தவறுகள் இருந்தால், அதனை அவனுக்கு புரிய வைத்தலும் ஆகும். ஆனால் பொதுவான மனித கருணை ஒவ்வொருவருக்கும் அவனோடு இருக்கும் அன்பாகும். ஒருவருடன் அன்பு உள்ளது என்று அவருடைய தனிப்பட்ட தீமைகளை, பலவீனங்களை மேற்கொள்வது அன்பின் பொருளல்ல.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

பசியுடன் இருப்பவர்களுக்கு உணவு கொடுத்தல், அடிமைகளை விடுவித்தல், கடனாளிகளின் கடனைக் கொடுப்பது, சுமை சுமப்பவரின் சுமையைச் சுமப்பது இவைகள் மனிதனுக்குரிய உரிமைகளாகும். பிறகு மனிதருக்குரிய உரிமைகளில் நீதி பற்றியும் வந்து விட்டது. பிறகு நீதியை விட ஒரு படி மேலாக இஹ்ஸான் (கருணை) காட்டுவதாகும். எவ்வித மத அடிப்படை இல்லாமல் ஒவ்வொருவரிடமும் செய்வதே கருணையாகும். மேலும் இதுவே மனிதனுக்குரிய உரிமைகளாகும். இது ஓர் மூஃமின் மற்றவரிடம் அன்பின் மூலம் செய்வதாகும். ஆனால் இது அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக இருக்க வேண்டும். முதல் அன்பு எந்த நிலையிலும் இறைவன் மீதுள்ளதாகும். இது 'செஸ்மயே மஸீஹ்' –ன் மேற்கோளாகும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

மனிதனுக்குரிய உரிமை பற்றி நாம் கூறி விட்டோம். அல்லாஹ்வுக்குரிய உரிமை தொடர்பாக இந்த வசனத்தின் பொருள் இதுவாகும். அதாவது,

**(16:91)** إِنَّ اللَّهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَىٰ

இதன் பொருள்: நேர்மையோடு இறைவனுக்குக் கட்டுப்பட்டு நடங்கள். ஏனென்றால் எவன் உன்னைப் படைத்து உன்னை பரிபாலித்த – எப்போதும் பரிபாலிக்கின்றானோ அவனுக்கு, நீ கட்டுப்பட வேண்டும் என்பது அவனுக்குரிய உரிமையாகும். அதை விட அதிகமாக உனக்கு ஞானம் இருக்கும் என்றால், உரிமையை விட அதிகமாக மட்டுமல்லாமல் கருணையைப் பேணியவாறு அவனுக்கு கட்டுப்படுங்கள். ஏனென்றால், அவன் கருணையாளன் ஆவான். அவனுடைய கருணைகள் எந்த அளவுக்கு என்றால், அதை கணக்கிடவே இயலாது. கட்டுப்படும் போது நீதியை விட அதிகமாக கருணையைக் கருத்தில் கொள்வது உயர்ந்த தரமாகும் என்பது வெளிப்படையானது. ஏனென்றால் எப்போதும் கருணையைப் பார்ப்பது படிப்பது கருணையாளனின் உருவத்தையும், சிறப்பையும் எப்போதும் கண்முன் கொண்டு வருகிறது. எனவே தான் இறைவனைப் பார்ப்பது போன்று இபாதத் செய்ய வேண்டும் என்பது இஹ்ஸானில் (கருணையில்) அடங்கியுள்ளது. மேலும் அந்த கருணையாளனின் உருவம் நம்முன் வரும் போது அவனின் கருணைகளும் நினைவுக்கு வருகின்றன அல்லது கருணையை நினைவு கூறும் போது கருணை காட்டுபவனின் உருவம் நம்முன் வருவதால் மேலும் அதிகமாக மனிதன் கருணையின் கீழ் வருகிறான்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

இறைவனுக்குரிய இஹ்ஸான் என்னவென்றால், இறைவனைப் பார்ப்பது போன்று இபாதத் செய்வதாகும். உண்மையில் இறைவனுக்கு கட்டுப்படக்கூடியவர்கள் மூன்று பிரிவினர்களாவர். முதலாவது, திரையின் காரணமாக, காரணிகளைக் காண்பதன் மூலமாக இறைவனின் கருணையை சரியான முறையில் காண இயலாதவர்கள். அதாவது திரைக்கப்பால் உள்ளான். மனித வடிவில் தெரியக்கூடியவன் அல்ல. உலகக் காரணிகள் தென்படுகின்றன. அதைப் பற்றிய அறிவும் உள்ளது. மேலும் அதை மனிதன் உணரவும் செய்கிறான். பிறகு எப்போது உலகத்தின் பொருள்கள் தென்படும்போது இதை படைத்த ஒரு இருப்பு இருக்கின்றது. அவன் இறைவனாவான் என்ற உணர்வு இருப்பதில்லை. எனவே ஒரு மனிதன் இந்த உலகப் பொருள்களின் மீது அதிக அன்பு கொள்ள ஆரம்பித்து விடுகிறான்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இவைகள் மூன்று வகையாகும். முதலில் கருணைகளை சரியான முறையில் பார்க்காதவர்கள் ஆவார்கள். காரணம் என்ன**?** அவன் திரைக்கப்பால் உள்ளான். மேலும் மற்ற காரணிகள் தென்படுகின்றன.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

கருணையின் மேன்மையை அறிந்த பிறகு உருவாகக்கூடிய உணர்வு அவர்களில் உருவாவதில்லை. கருணை காட்டுபவனின் மாபெரும் அருள்களை எண்ணி உருவாகக்கூடிய அன்பும் இருப்பதில்லை. மாறாக, வெறும் வெளிப்பார்வையில் இறைவனின் படைக்கும் பண்பின் உரிமையை ஏற்கின்றனர். ஆனால் அல்லாஹ்வின் கருணையை ஏற்பதில்லை. எவ்வாறிருப்பினும், ஒட்டுமொத்தமாக நாங்கள் முஸ்லிம்கள் என்று வாதம் செய்வதன் மூலமாக இறைவனின் உரிமை அல்லது அவனது அடியானாக இருக்கும் உரிமையை அதாவது இறைவன் நம்மை படைத்தான் என்று ஏற்றுக் கொள்கிறார்கள்.

***மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இந்த இறைவனின் கருணைகளை நுட்பமான முறையில் பார்த்தால் அது கருணை காட்டுபவனை நம் கண் முன்னால் கொண்டு வருகிறது. அதை அவர்கள் ஒருபோதும் பார்ப்பதில்லை. பொதுவாக நாங்கள் இறைவனை ஏற்றுக் கொள்கிறோம்; இறைவனின் மீது அன்பு உள்ளது என்று கூறி விடுகிறார்கள். ஆனால் அவனிடமிருந்து பலன் பெறும் போது அவனது கருணைகளை கருத்தில் கொள்வதில்லை. மாறாக, உலகக் காரணிகளை கருத்தில் கொள்கின்றனர்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இதன் காரணம் என்ன? ஏனென்றால் காரணிகளை வணங்குவதன் தூசிகள், உண்மையில், காரணிகளை உருவாக்குபவனின் முகத்தைப் பார்ப்பதிலிருந்து தடுக்கிறது. ஏனென்றால் வெளிப்படையான முறையில் எதிலிருந்து மனிதன் பலன் அடைகிறானோ அந்த காரணிகள், அவனை காரணிகளை உருவாக்கக்கூடிய இறைவனின் முகத்தைக் காண முடியாத அளவுக்கு மூடி விடுகின்றன. ஏனென்றால், காரணிகளை வணங்குதல் உள்ளது. இது உண்மையான காரணிகளை உருவாக்கக்கூடியவின் முகத்தை பார்க்க விடாமல் தடுக்கிறது. எனவே, அந்த அருளுக்குரிய இறைவனின் அழகை முழுமையாகக் காண முடிவதில்லை. உண்மையில் அவனே அனைத்துப் பொருள்களையும் வழங்கக் கூடியவனாக இருக்கிறான். ஆனால் அவனுடைய அழகு தென்படுவதில்லை.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

ஆக, அவர்களின் பலவீனமான மஃரிஃபத் (இறை ஞானம்) காரணிகளைக் காண்பதன் சக்தியோடு இணைந்திருப்பதால் இறைவனின் கருணைகளைச் சரியான முறையில் காண இயலாது. இறையருட்களை நினைவு கூறும் போது அவர்களிடம் கவனக்குறைவு காணப்படுவதால் கருணையாளனின் முகம் அவர்களின் கண்களுக்கு தென்படுவதில்லை. மாறாக, அவர்களின் மஃரிஃபத் மங்கலாக உள்ளது. அதன் காரணம், ஒரு பக்கம் அவர்கள் தங்களது உழைப்பு மற்றும் காரணிகளின் மீது நம்பிக்கை கொள்கின்றனர். மேலும் அவர்கள் இறைவனின் படைத்தல் மற்றும் பரிபாலித்தலின் உரிமைகள் நம் மீது கடமையாக்கப்பட்டுள்ளது என்பதை கொள்கைரீதியாக மட்டும் ஏற்றுக் கொள்கின்றனர். இறைவன் மனிதனுக்கு அவனுடைய சக்தியை விட அதிகமாக கஷ்டத்தைக் கொடுப்பதில்லை. அதனால் அவர்கள் இந்த நிலையில் இருக்கும் வரை அவனுடைய உரிமைகளுக்காக அவர்கள் நன்றி தெரிவிக்க வேண்டும் என்று மட்டுமே அவன் விரும்புகிறான்.

**(16:91)** إِنَّ اللَّهَ يَأْمُرُ بِالْعَدْلِ அத்ல் என்பதன் பொருள் நீதியாகும். ஏனென்றால் இவர்களுக்கு முழுமையாக அது பற்றிய அறிவு இல்லை. அவர்கள் இறைவனின் படைத்தல், பரிபாலித்தல் பண்புகளுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று வாயளவில் கூறினாலும் கூட இறைவனின் நீதியும் அவர்களுக்கு இதுவே போதுமானதாகக் கருதுவதாகும். நாங்கள் இறைவனுக்கு நிறைய செய்து விட்டோம் என்று அவர்களும் கருதுகிறார்கள்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

மனிதனின் மஃரிஃபத்திற்கு இதை விட மேலான ஒரு தகுதி உண்டு. அது என்னவென்றால், நாம் கூறியது போன்று மனிதனின் பார்வை காரணிகளைக் காண்பதிலிருந்து தூய்மையடைந்து, அல்லாஹ்வின் அருள் மற்றும் கருணையின் கரத்தைக் கண்டு விடுகிறது. இந்த இடத்தில் மனிதன் காரணிகளின் திரைகளிலிருந்து வெளியே வந்து விடுகிறான். உதாரணமாக, இதுபோன்ற சொல் வழக்குகள் அதாவது, நான் நீரூட்டியதன் மூலமாகவே வயல் பெரிதானது அல்லது எனது கைகளினாலேயே எனக்கு வெற்றி கிடைத்தது அல்லது ஸைதின் கருணையினால் அந்த நோக்கம் பூர்த்தியானது அல்லது பகர் கூறியதனாலேயே நான் அழிவிலிருந்து தப்பித்து விட்டேன். இந்த அனைத்து விஷயங்களும் ஒன்றுமற்றதும், பொய்யும் ஆகத் தெரிகிறது. மேலும் ஒரே இருப்பு, ஒரே வல்லமை, ஒரே கருணையாளன், ஒரே கையே தென்படுகிறது. அப்போது மனிதன் ஒரு தூய பார்வையுடன் அத்தோடு ஒரு அணு அளவு ஷிர்க் மற்றும் காரணிகளின் மாசுக்கள் இல்லாமல் அல்லாஹ்வைக் காண்கின்றான். இந்த பார்த்தல் எந்த அளவுக்கு தூயதாகவும்,

உண்மையானதாகவும் இருக்கிறதென்றால் அந்த கருணையாளனை இபாதத் செய்யும் போது அவனை மறைவானவனாகக் கருதுவதில்லை. மாறாக, நிச்சயமாக அவன் அங்கு இருப்பதாக உணர்ந்து அவனை இபாதத் செய்கிறான். இந்த இபாதத்தின் பெயர் திருக்குர்ஆனில் இஹ்ஸான் (கருணை) ஆகும்.

மேலும் ஸஹீஹ் புகாரி மற்றும் முஸ்லிமில் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களும் இஹ்ஸானுக்கு இதே பொருளைத்தான் கொடுத்துள்ளார்கள். இந்த இடத்திற்குப் பிறகு இன்னொரு தர்ஜா உள்ளது. وَإِيْتَآئِ ذِى الْقُرْبٰى இதன் பொருள், விளக்கம் இதுவாகும். எப்போது மனிதன் நீண்ட காலம் வரை இறைவனின் கருணைகளைக் காரணிகளை தவிர்த்துப் பார்த்து வந்தால், மேலும் அவன் இருப்பதாகக் கருதி அவனை வணங்கி வந்தால், இந்த எண்ணத்தின் இறுதி விளைவு, இறைவன் தொடர்பாக ஒரு தனிப்பட்ட அன்பு உருவாகி விடும் என்பதாகும். ஏனென்றால் தொடர்ந்து கருணைகளையே எப்போதும் பார்த்து வந்தால், அவருடைய உள்ளத்தில் அதாவது எவருடைய உள்ளத்தில் கருணை காட்டப்பட்டதோ அவரிடம் ஒரு தாக்கம் உருவாகிறது. அது கொஞ்சம் கொஞ்சமாக தனிப்பட்ட அன்பால் நிரம்பி விடுகிறது. ஆக, இந்த நிலைமையில் கருணைகளைக் கருத்தில் கொண்டு அவனை வணங்கவில்லை. மாறாக, எவ்வாறு குழந்தைக்கு தனது தாயோடு ஒரு தனிப்பட்ட அன்பு இருக்கிறதோ அவ்வாறான ஒரு தனிப்பட்ட அன்பு அவனது உள்ளத்தில் குடிகொண்டு விடுகிறது.

ஆக, இந்த முறை அவன் இபாதத்தின் போது இறைவனைப் பார்க்க மட்டும் செய்யவில்லை. மாறாக, பார்த்து உண்மையான நேசிக்கக்கூடியவனைப் போன்று இன்பமும் அடைகிறான். மேலும் நஃப்ஸின் அனைத்து நோக்கங்களும் அழிந்து தனிப்பட்ட அன்பு அதனுள் உருவாகி விடுகிறது. இந்த தர்ஜாவை இறைவன் وَإِيْتَآئِ ذِى الْقُرْبٰى என்ற வார்த்தையில் குறிப்பிட்டு, இதன் பக்கம் இறைவன் இந்த வசனத்தில் சுட்டிக் காட்டியுள்ளான்.

إِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيْتَآئِ ذِى الْقُرْبٰى فَاذْكُرُوا اللّٰهَ كَذِكْرِكُمْ آبَآءَكُمْ أَوْ أَشَدَّ ذِكْرًا

இதன் விளக்கம் இதுவாகும். இதில் இறைவன், மனித இறை ஞானத்தின் மூன்று தரத்தையும் கூறிவிட்டான். மேலும் மூன்றாவது இடத்தை தனிப்பட்ட அன்பாக ஆக்கியுள்ளான். இதுவே நஃப்ஸின் நோக்கங்கள் எரிந்து விடக்கூடிய தர்ஜாவாகும். ஒரு பாட்டில், வாசனைப் பொருளால் நிரம்பி இருப்பதைப் போன்று உள்ளம் அன்பால் நிரம்பி விடுகிறது. இந்த தரத்தைப் பற்றியே இந்த வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(2:108) وَمِنَ النَّاسِ مَنْ يَّشْرِىْ نَفْسَهُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ ۗ وَاللّٰهُ رَءُوْفٌۢ بِالْعِبَادِ

அதாவது, மூஃமின்களில் ஒரு சிலர் இவ்வாறும் இருக்கின்றனர். அதாவது, இறை விருப்பத்தைப் பெறுவதற்காக தன் உயிரையும் விற்று விடுகின்றனர். இறைவன் அப்படிப்பட்டவர்கள் மீது கருணையாளனாக இருக்கிறான்.

***பிறகு கூறினான்:***

بَلٰى ۚ مَنْ أَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ فَلَهٗٓ أَجْرُهٗ عِنْدَ رَبِّهٖ ۖ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ
وَلَا هُمْ يَحْزَنُوْنَ

பொருள்: *அவ்வாறன்று. எவர் தம்மை அல்லாஹ்விடம் முழுமையாக ஒப்படைத்து நற்செயல் செய்பவராகவும் விளங்குகிறாரோ அவருக்குரிய நற்கூலி அவருடைய இறைவனிடத்தில் உண்டு. அவர்களுக்கு வருங்காலத்தைப் பற்றிய எவ்வித அச்சமும் இருக்காது. இறந்த காலத்தைப் பற்றி அவர்கள் துயரமும் அடையமாட்டார்கள். (2:113)*

அதாவது அவர்களின் நோக்கம் இறைவன் மற்றும் இறைவனின் அன்பாக ஆகி விடுகிறது. மேலும் இறைவனிடமிருந்து வரும் அருள்கள் அவர்களின் நற்கூலியாகி விடுகின்றன.

***பிறகு இன்னோரிடத்தில் கூறுகிறான்:***

(76:9) وَيُطْعِمُوْنَ الطَّعَامَ عَلٰى حُبِّهٖ مِسْكِيْنًا وَّيَتِيْمًا وَّأَسِيْرًا

(76:10) إِنَّمَا نُطْعِمُكُمْ لِوَجْهِ اللّٰهِ لَا نُرِيْدُ مِنْكُمْ جَزَآءً وَّلَا شُكُوْرًا

அதாவது அவர்கள் அந்த இறைவன் மீது கொண்ட அன்பின் காரணமாக ஏழை, அனாதை, கைதி ஆகியோருக்கு உணவளிக்கின்றனர்.

இந்த அனைத்து தொண்டுகளின் மூலம் முழுக்க முழுக்க இறைவனின் முகம் மட்டுமே நோக்கமாகும். இப்போது சிந்திக்க வேண்டும். இந்த அனைத்து வசனங்களிலிருந்து எந்த அளவுக்கு தெளிவாக இறைவனின் அன்பு, மேலும் இறைவனின் விருப்பத்தின் தேட்டம் உண்மையான உள்ளத்தோடு வெளிப்பட வேண்டும் என்றால் திருக்குர்ஆன் உயர் தர இறை வணக்கம், நற்செயல்களின் நோக்கமாக அதனை வைத்துள்ளது. மனிதன், இறைவனை சுய விருப்பங்களுக்காக அல்லாமல் இயற்கையான அன்பின் உணர்வோடு இறை வணக்கம் செய்ய வேண்டும் என்பதற்காகவே இறைவன் இந்த மார்க்கத்தின் பெயரை இஸ்லாம் என்று வைத்துள்ளான். தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இபாதத்துகள் செய்யக்கூடாது. மாறாக, உணர்வுள்ள இயல்போடு செய்ய வேண்டும். இஸ்லாம் அனைத்து நோக்கங்களை விட்டு விட்டு இறை நியதியோடு பொருந்துவதன் பெயராகும். உலகில் இஸ்லாத்தைத் தவிர வேறெந்த மார்க்கத்திற்கும் இந்த நோக்கங்கள் இல்லை. நிச்சயமாக இறைவன் தன்னுடைய அருளை நிரூபிப்பதற்காக மூஃமின்களுக்கு அருள்களின் வாக்குறுதிகளை வழங்கியுள்ளான். ஆனால் உயர் இடத்தை விரும்பக்கூடிய மூஃமின்களுக்கு அவர்கள் தனிப்பட்ட அன்பின் மூலமாக இறைவனை வணங்குங்கள் என்ற போதனையே வழங்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட அன்பினால் செய்யக்கூடிய இபாதத்துகளே அசல் இபாதத்துகளாகும். ஏதேனும் பலன் அடைவதற்காக செய்யப்படுபவைகள் அல்ல.

***பிறகு இன்னோரிடத்தில் உண்மையான அன்பின் அடையாளங்களை கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

அன்பு வியப்பிற்குரிய ஒன்றாகும். இதன் நெருப்பு பாவத்தின் நெருப்பை எரித்து விடுகிறது; பாவத்தின் நெருப்புப் பிளம்பை அணைத்து விடுகிறது. உண்மையான தனிப்பட்ட அன்போடு, தண்டனை ஒருபோதும் சேர முடியாது. மேலும் உண்மையான அன்பின் அடையாளங்களில் ஒன்று இதுவுமாகும். அதாவது தன்னுடைய நேசத்திற்குரியவனின் பயம் அவனது இயல்பில் பதிந்து விடுகிறது. மேலும் ஒரு சிறிய தவறின் மூலம் தன்னை அழிந்து போனவனாகக் கருதுகிறான். மேலும் தன் நேசத்திற்குரியவனின் எதிர்ப்பை தனக்கு ஒரு விஷமாகக் கருதுகிறார். மேலும் தன் நேசத்திற்குரியவனை அடைவதற்கு மிகவும் நிம்மதியிழந்து விடுகிறார். மேலும் தூரத்தின் துக்கம் காரணமாக எந்த அளவு கவலைக்கு உள்ளாகிறான் என்றால் மரணித்தே விடுகிறான். எனவே மக்கள் எதை பாவமாகக் கருதுகிறார்களோ அதை மட்டும் பாவமாகக் கருதுவதில்லை. அதாவது கொலை செய்தல், இரத்தம் சிந்துதல், விபச்சாரம் செய்தல், திருடுதல், பொய் சாட்சி கூறுதல். மாறாக, அவன் ஒரு சிறிய கவனக்குறைவை சிறிது அலட்சியமாக இறைவனை விட்டு இறைவன் அல்லாதவற்றின் பக்கம் செய்யப்படுவதை ஒரு பெரும் பாவமாகக் கருதுகிறான். எனவே எப்போதும் தன்னுடைய நேசத்திற்குரியவனின் சன்னிதானத்தில் தொடர்ச்சியாக இஸ்திக்ஃபார் செய்து கொண்டேயிருக்கிறான். தொடர்ந்து இஸ்திக்ஃபார் செய்து கொண்டிருக்கிறான். ஏனென்றால், அவனுடைய இயல்பு ஒருபோதும் இறைவனை விட்டு பிரிந்திருப்பதை ஏற்றுக் கொள்வதில்லை. எனவே மனிதப் படைப்பின் எதிர்பார்ப்பின்படி ஒரு சிறு கவனக்குறைவு ஏற்பட்டால் கூட அதை ஒரு மலை போன்ற பாவமாகக் கருதுகிறான். இதுவே உண்மையாகும். இறைவனோடு, தூய, முழுமையான தொடர்பு வைக்கக்கூடியவர்கள் எப்போதும் இஸ்திக்ஃபாரில் மூழ்கியிருக்கின்றனர். ஏனெனில் ஓர் உண்மையான நேசிக்கக்கூடியவருக்கு அவன் நேசிக்கக் கூடியவன் கோபப்பட்டு விடக்கூடதே என்ற கவலை எப்போதும் இருக்கிறது. ஏனென்றால் அவனது உள்ளத்தில் இறைவனுடன் முழுமையாகப் பொருந்தி விட வேண்டும் என்றவொரு தாகம் போடப்படுகிறது எனவே இறைவன் நான் உன்னோடு பொருந்தி விட்டேன் என்று கூறினாலும் கூட அவனால் பொறுமையை மேற்கொள்ள இயலாது. எவ்வாறு ஒரு மது அருந்தக்கூடியவன் ஒவ்வொரு முறை அருந்தி விட்டும் பிறகு மறுமுறை கேட்கிறான். அவ்வாறே மனிதனுக்குள் இறை அன்பின் நீரூற்று பெருக்கெடுத்து அந்த அன்பு இயல்பாகவே மேலும் அதிகமான அன்பு இறை விருப்பத்தைப் பெற வேண்டும் என எதிர்பார்க்கிறது. அல்லாஹ், நான் பொருந்தி விட்டேன் என்று கூறி விட்டாலும் அமர்ந்து விடுவதில்லை. மாறாக இந்த இறை விருப்பம் பற்றிய செய்தி கிடைப்பது மேலும் இஸ்திக்ஃபார் மற்றும் இபாதத்துகளின் பக்கம் அவரை குனிய வைக்கிறது. மேலும் அதை நிறைவேற்றுவதன் பக்கம் கவனமூட்டுகிறது.

கூறினார்கள்: ஆக, அன்பு அதிகமாவதால் இஸ்திக்ஃபாரும் அதிகமாகிறது. இதுவே இறைவனிடம் முழுமையான முறையில் அன்பு செலுத்தக்கூடியவர்கள் எப்போதும் ஒவ்வொரு வினாடியும் இஸ்திக்ஃபார் செய்வதன் காரணமாகும். எப்போதும் இஸ்திக்ஃபாரில் மூழ்கி இருக்கிறார்கள். மேலும் இஸ்திக்ஃபாரின் உண்மையான பொருள் இதுவாகும். அதாவது மனித பலவீனத்தினால் ஏற்படக்கூடிய ஒவ்வொரு தவறையும் நீக்குவதற்கு இறைவனிடம் உதவி கோரப்படுகிறது. இறைவனின் அருளால் அந்த பலவீனம் வெளிப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக. மேலும் பலவீனம் மறைவாக இருக்க வேண்டும் என்பதற்காக. இதன் பிறகு இஸ்திக்ஃபாரின் பொருள் பொதுமக்களுக்காக விரிவாக்கப்பட்டுள்ளது. எந்த தவறு நடந்து விட்டதோ இறைவன் அதன் தீய விளைவு மற்றும் விஷத்தாக்கத்திலிருந்து இவ்வுலகிலும் மறுமையிலும் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்பதும் இஸ்திக்ஃபாரில் உள்ளது. ஆக உண்மையான

இரட்சிப்பின் நீரூற்று இறைவனிடம் கொள்ள வேண்டிய தனிப்பட்ட அன்பாகும். அது நிகரற்ற, நிலைப்பாடுடைய இஸ்திக்ஃபார் மூலமாக இறைவனின் அன்பை தன் பக்கம் ஈர்க்கிறது. எப்போது மனிதன் தன் அன்பை முழுமை அடையச் செய்கிறானோ, மேலும் அன்பின் நெருப்பு மூலம் தன் நஃப்ஸின் உணர்வுகளை எரித்து விடுகிறானோ அப்போது மீண்டும் ஒருமுறை ஒரு தீச்சுடர் போன்று இறைவனின் அன்பு அவனது உள்ளத்தில் விழுகிறது. மேலும் அவனை அடிமட்ட வாழ்க்கையின் அசுத்தங்களிலிருந்து வெளியே கொண்டு செல்கிறது. மேலும் உயிருள்ள மற்றும் நிலைத்திருக்கக்கூடிய இறைவனின் தூய்மையின் நிறம் அவனின் நஃப்ஸின் மீது ஏறி விடுகிறது. மாறாக அனைத்து இறை பண்புகளிலிருந்து நிழல் வடிவில் அவனுக்கு பங்கு கிடைக்கிறது. அப்போது அது இறைவனின் வெளிப்பாடாக இருக்கிறது. மேலும் எவைகளெல்லாம் ருபூபிய்யத்தின் நிலைத்திருக்கும் கருவூலத்தில் மறைந்துள்ளதோ அது அந்த இரகசிய உலகிற்கு வெளிப்படுகிறது. ஏனென்றால் அந்த உலகைப் படைத்த இறைவன் கஞ்சத்தனம் கொண்டவனல்ல. மாறாக, அவனுடைய அருள்கள் எப்போதும் இருப்பவையாகும். அவனது பெயர்களும், பண்புகளும் முடிந்து விடுவதில்லை.

பிறகு பாவத்தை நீக்குவது மேலும் நல் அமல்கள் செய்வது இறைவனின் அன்பு இல்லாமல் சாத்தியமில்லை என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பாவம் உண்மையில் எப்படிப்பட்ட ஒரு விஷம் என்றால் எப்போது மனிதன் இறைவனின் கட்டுப்படுதல் மற்றும் இறைவனின் உணர்ச்சிப்பூர்வ அன்பு மேலும் இறை நினைப்பிலிருந்து தூரமாகி பாக்கியமற்றவனாக இருக்கும்போது எவ்வாறு ஒரு மரம் பூமியிலிருந்து பிடுங்கப்பட்டால் மேலும் நீரை உறிஞ்சுவதற்கு தகுதி வாய்ந்ததாக இல்லாமல் இருந்தால் அது நாளுக்கு நாள் காய ஆரம்பிக்கிறது. மேலும் அதன் அனைத்து பசுமையும் அழிந்து விடுகிறது. இந்த நிலையே அந்த மனிதனின் நிலையும் ஆகும். எவருடைய உள்ளத்திலிருந்து இறை அன்பு பிடுங்கப்பட்டு விட்டதோ, காய்ந்த தன்மையைப் போன்று பாவம் அவனை வெற்றி கொள்கிறது.

ஆக, இந்த காய்ந்த தன்மைக்கான சிகிச்சை இறைவனின் இயற்கை சட்டத்தில் மூன்று விதமாக உள்ளது. முதலாவது, அன்பு. இரண்டாவது, இஸ்திக்ஃபார். இதன் பொருள் அமுக்குவது அல்லது மூட விரும்புவது. ஏனென்றால் எதுவரை மண்ணில் மரத்தின் வேர் நிலைத்திருக்குமோ அதுவரை அதில் பசுமையை எதிர்பார்க்கலாம். மூன்றாவது சிகிச்சை, தவ்பா (பாவமன்னிப்பு தேடுதல்) ஆகும். அதாவது வாழ்க்கையின் நீரை ஈர்ப்பதற்கு தாழ்மையுடன் இறைவன் பக்கம் திரும்பி, மேலும் தன்னை அவனுக்கு அருகில் கொண்டு சேர்த்து மேலும் பாவத்தின் திரையிலிருந்து தன் நற்செயல்களால் தன்னை வெளியே கொண்டு வருவது. அதாவது பாவத்தின் திரையை விலக்குவதற்கு நல் அமல்களின் அவசியம் உள்ளது. மேலும் நற்செயல்கள் செய்வதற்கு முதலிலும் நான் கூறியது போன்று கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன் அல்லது ஒரு சில வாரங்களுக்கு முன் குத்பாவில் கூறியிருந்தேன். இவைகளுக்கு எண்ணத்தின் ஆற்றல், அறிவும் இருப்பது, மேலும் அமலின் ஆற்றலின் தேவையும் உள்ளது. அப்போது தான் இந்த திரை விலகுகிறது.மேலும் நற்செயல் செய்யக்கூடிய நல்வாய்ப்பு கிடைக்கின்றது. பிறகு மனிதன் அந்த தீமைகளிலிருந்து வெளி வருகிறான்.

***மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

பாவ மன்னிப்பு வெறும் வாயளவில் அல்ல. மாறாக தவ்பாவின் முழுமை அடைதல் நற்செயலைச் சார்ந்துள்ளது. நாவால் தவ்பா செய்வதன் எவ்வித அவசியமும் இல்லை. அத்தோடு நற்செயல்கள் செய்யும் போது தான் தவ்பா உண்மையான தவ்பாவாக கருதப்படுகிறது. எல்லா நன்மைகளும் தவ்பா முழுமைப்படுத்துவதற்காகும். ஏனென்றால் நாம் இறைவனுக்கு நெருக்கமாக ஆகி விட வேண்டும் என்பதே மிகவும் முக்கியமானதாகும். துஆவும் தவ்பா ஆகும். ஏனென்றால் இதன் மூலமாகவும் இறைவனின் நெருக்கத்தை தேடுகிறார்கள். எனவே தான் இறைவன் மனித உயிரைப் படைதது அதன் பெயரை ரூஹ் என்று வைத்துள்ளான். ஏனென்றால் அதன் உண்மையான நிம்மதி இறைவனை ஏற்றுக் கொள்தல், அவனது அன்பு மற்றும் அவனுக்கு கட்டுப்படுதலில் உள்ளது. மேலும் அது இறைவனோடு ஒன்றிணைக்கக்கூடியதாக இருப்பதால் அதன் பெயர் நஃப்ஸ் என்று வைக்கப்பட்டுள்ளது. இறைவனின் அன்பில் அவனுக்கு நிம்மதி கிடைப்பதால் ரூஹ் என்று பெயர் வைத்தான். நஃப்ஸில் இறைவனோடு ஒன்று சேரக்கக்கூடிய ஆற்றல் இருப்பதால் நஃப்ஸ் என்று கூறப்படுகிறது. அன்னார் இந்தக் கூற்றைக் கூறியுள்ளார்கள்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இறைவனோடு அன்பு கொள்வது எவ்வாறென்றால், தோட்டத்தில் அதன் மண்ணோடு நன்கு நிலைத்துள்ள மரத்தைப் போன்றதாகும். இதுவே மனிதனின் சொர்க்கம் ஆகும். எவ்வாறு மரம் நிலத்தின் நீரை உறிஞ்சுகிறதோ,

மேலும் தன்னுள் ஈர்த்துக் கொள்கிறதோ அதன் மூலம் தன்னுள் உள்ள தீயவற்றை வெளியேற்றுகிறது. மனிதனின் உள்ளத்தின் நிலையும் இதுபோன்றதேயாகும். அவன் இறை அன்பின் நீரை உறிஞ்சி விஷப்பொருட்களை வெளியேற்றுவதற்கான ஆற்றலை அடைகிறான். மேலும் மிகவும் எளிமையாக அதை வெளியே தள்ளி விடுகிறான். மேலும் இறைவனில் மாய்ந்து தூய வளர்ச்சியை அடைகிறான். மேலும் அதிகமாக பரவுகிறான். கண் குளிர் காய்கறிகள் கிடைக்கிறது. மேலும் நல்ல பழங்களைக் கொடுக்கிறான். ஆனால் அவர் இறைவனின் தொடர்பில் இல்லையோ அவன் வளர்ச்சியைத் தரக்கூடிய தண்ணீரை உறிஞ்ச இயலாது. எனவே கொஞ்சம் கொஞ்சமாக காய்ந்து கொண்டே செல்கிறது. இதனால் இலைகளும் விழுந்து விடுகின்றன. காய்ந்த அசிங்கமான கிளைகளாக இருந்து விடுகின்றன. ஆக, பாவம் என்கிற காய்ந்த தன்மை தொடர்பின்மையால் உருவாகிறது. எனவே இந்த காய்ந்த தன்மையை நீக்குவதற்கு எளிதான தீர்வு உறுதியான தொடர்பே ஆகும். அல்லாஹ்வோடு வலுவான தொடர்பை உருவாக்கும் போதுதான் இந்த காய்ந்த தன்மை விலகும். இல்லையென்றால் காய்ந்த மரத்தைப் போன்று மனிதன் ஆன்மீக ரீதியில் முற்றிலும் அழிந்து விடுகிறான்.

எதன் மீது இயற்கைச் சட்டம் சான்று பகர்கிறதோ அதை சுட்டிக் காட்டியவாறு அல்லாஹ் கூறுகிறான்:

يَا أَيَّتُهَا النَّفْسُ الْمُطْمَئِنَّةُ ۝ ارْجِعِي إِلَىٰ رَبِّكِ رَاضِيَةً مَّرْضِيَّةً ۝ فَادْخُلِي فِي عِبَادِي ۝ وَادْخُلِي جَنَّتِي ۝

பொருள்: *நிம்மதியடைந்த ஆன்மாவே! நீ உன் இறைவனிடம் திருப்தி அடைந்தவாறும், அவன் (உன்னிடம்) திருப்தியடைந்தவாறும் (அவனிடம்) திரும்பி வருக. தேர்ந்தெடுக்கப்பட்ட என் அடியார்களுக்கிடையே நுழைந்து விடுக. மேலும் நீ என் தோட்டத்தில் நுழைந்து விடுக. (89:28-31)*

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

ஆக, பாவத்தை நீக்குவதற்கான தீர்வு இறைவனின் அன்பு மற்றும் நேசம் மட்டுமே ஆகும். எனவே அன்பின் நீரூற்றிலிருந்து வெளி வரக்கூடிய நற்செயல்கள் பாவத்தின் நெருப்பின் மீது தண்ணீர் தெளிக்கின்றன. ஏனென்றால் மனிதன் இறைவனுக்காக நன்மையான காரியங்கள் செய்து தன் அன்பின் மீது முத்திரை பதிக்கிறார். இறைவனை எல்லாவற்றையும் விட முன்னுரிமை கொடுத்து, எதுவரையென்றால் தனது உயிரை விட மேலானதாகக் கருதுவது இது முதல் தர அன்பாகும். அதாவது அதன் ஒப்புமை பூமியில் உள்ள மரத்தைப் போன்றதாகும். இரண்டாவது தரம் இஸ்திஃபார். இதன் பொருள் இறைவனிடமிருந்து பிரிந்து மனிதனின் திரை அகலாமல் இருக்க வேண்டும். இந்த நிலை முழுமையாக தன் வேரை பூமியில் நிலைபெறச் செய்யும் மரத்தின் நிலையை ஒத்ததாகும். பிறகு மூன்றாவது தவ்பாவின் நிலை. மரம் தனது வேரை தண்ணீருக்கு அருகே கொண்டு சென்று குழந்தையைப் போல் அதை உறிஞ்சுகிறதைப் போன்றதாகும். ஆக பாவத்தின் தத்துவம் இதுவாகும். அதாவது அது இறைவனிடமிருந்து பிரிவதன் மூலம் உருவாகிறது. அதை நீக்குவது இறை தொடர்பை சார்ந்துள்ளது. எவருடைய தற்கொலையையும் பாவத்தின் தீர்வு எனக் கூறுகின்றனர். எவ்வாறு அறியாதவர்களாக இருக்கிறார்கள்?

பிறகு இறைவனின் நெருக்கத்தைப் பெறக் கூடிய வழிமுறையைக் கூறியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

مَنْ كَانَ يَرْجُوا لِقَاءَ رَبِّهِ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهِ أَحَدًا ۝

பொருள்: *எவர் தன் இறைவனை சந்திக்க விரும்புகிறாரோ அவர் நற்செயல்களைச் செய்து தன் இறைவனுக்கு வேறெவரையும் இணையாக ஆக்காதிருக்க வேண்டும். (18:111)*

எந்தவொரு குழப்பமும் இல்லாத நற்செயலக்ளைச் செய்ய வேண்டும். அதாவது அமல் மக்களுக்கு காட்டுவதற்காகவோ அல்லது அதன் மூலம் உள்ளத்தில் அகங்காரம் எழவோ அதாவது நான் அப்படியாவேன்; இப்படியாவேன் என்று கூறுவதற்கோ அல்ல. மேலும் அது குறையுள்ள அமலாக இருக்கக் கூடாது. மேலும் தனிப்பட்ட அன்பிற்கு எதிரான துர்நாற்றம் அந்த அமலில் இருக்கக் கூடாது. மாறாக உண்மை மற்றும் நன்றி உணர்வால் நிரம்பி இருக்க வேண்டும். மேலும் அத்தோடு எல்லா விதமான இணை வைத்தலிலிருந்தும் விலகியிருக்க வேண்டும். சூரியனோ, சந்திரனோ, வானத்தின் நட்சத்திரங்களோ, காற்றோ, நெருப்போ, நீரோ அல்லது பூமியின் வேறெந்த பொருளும் வணக்கத்திற்குரியதாக ஆக்கப்படக் கூடாது. மேலும் உலகக் காரணிகளுக்கு இறைவனுக்கு இணையாக கண்ணியம் அளிக்கப்படவோ அல்லது நம்பிக்கை வைக்கப்படுவதோ கூடாது. மேலும் தனது தைரியத்தையும், முயற்சியையும் ஒரு பொருட்டாகவே கருதக் கூடாது. இதுவும் ஷிர்க்கின் விதங்களில் ஒரு விதமாகும். மாறாக அனைத்தும் செய்த பிறகும் கூட நான் ஒன்றும் செய்யவில்லை என்று கருத வேண்டும். மேலும் தனது அறிவின் மீது ஆணவம் கொள்ளக் கூடாது. மேலும் தனது அமல் மீது பெருமை கொள்ளவும் கூடாது. மாறாக உண்மையில் தன்னை மூடனாகக் கருத வேண்டும். மேலும் இயலாதவனாகக் கருத வேண்டும். மேலும் ரூஹ் எப்போதும் இறை

சன்னிதானத்தில் வீழ்ந்து கிடக்க வேண்டும். மேலும் துஆவின் மூலம் அவனுடைய அருளை தன் பக்கம் ஈர்க்க வேண்டும. மேலும் அவனுடைய நிலை கடும் தாகமான உதவியற்ற நிலையில் ஒரு மனிதருக்கு முன்னர் ஒரு தூய்மையான இனிப்பான நீரூற்று வெளிப்படுகிறது. அவர் தன்னை அந்த நீரூற்றிற்கு அருகே கொண்டு சென்று தன் உதடுகளை நீரூற்றில் வைத்து விட்டு திருப்தி அடையாத வரை அதை விட்டு விலகாதவரின் நிலையைப் போன்றதாகும்.

***பிறகு இறை அன்பின் தரத்தைப் பற்றி கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

உங்களில் ஒரு உண்மையான நேசருக்கு ஒருவரின் மீது அன்பு உள்ளது. எவ்வாறு அவர் தன் அன்பிற்குரியவரின் பிரிவில் பட்டினியாக வாடுகிறாரோ, தாகத்தோடு இருக்கிறாரோ, சாப்பாட்டைப் பற்றிய உணர்வோ, தண்ணீரைப் பற்றிய கவலையோ இல்லாவதர், மேலும் தன் உடலைப் பற்றி எந்த கவலையையும் இல்லாதவரைப் போல் நீங்களும் இறைவனின் அன்பில் மூழ்கி விடுங்கள். நடுவிலிருந்து உங்களது இருப்பே மறைந்து விட வேண்டும். பிறகு அப்படிப்பட்ட தொடர்பில் மனிதன் மரணித்து விட்டாலும் கூட மிகவும் நற்பாக்கியம் பெற்றவராவார். நமக்கு தனிப்பட்ட அன்பு தான் வேண்டும். கஷ்ஃப்களைப் பற்றியோ இல்ஹாம்களைப் பற்றியோ எந்தக் கவலையும் இல்லை. மக்கள் கஷ்ஃப் வந்தது. இல்ஹாம் வந்தது என்று கூறுகிறார்கள். இறைவனோடு தனிப்பட்ட அன்பு இருக்கும் என்றால் அதுவே அசல் ஆகும். எத்தனை இல்ஹாம் வந்தது? எத்தனை கஷ்ஃப் வந்தது? எத்தனை உண்மையான கனவுகள் வந்தது? என்பதல்ல.

பாருங்கள்! ஒரு குடிகாரன் மதுபானத்தின் மேல் மதுபானம் அருந்துகின்றான். மேலும் இன்பம் அடைகிறான். இவ்வாறே நீங்கள் அவனின் தனிப்பட்ட அன்பின் பானத்தை நிரப்பி நிரப்பி அருந்துங்கள். எவ்வாறு அவர்கள் அருந்திக் கொண்டே செல்கின்றனரோ அதுபோல் நீங்களும் இப்போது நான் நேசர் என்று சொல்லத் தகுதியான இடத்தை அடைந்து விட்டேன் என்று கூறும் வரை திருப்தி அடைந்து விடாதீர்கள். அதுவரை பின்வாங்காதீர்கள். அடியை முன்னெடுத்தே வையுங்கள். மேலும் அந்த பானத்தை வாயிலிருந்து அகற்றாதீர்கள். அதற்காக தன்னைத் தானே நிம்மதியற்றவராக ஆக்கி விடுங்கள். அந்த தரம் வரை சென்றடையவில்லை என்றால் நீங்கள் ஒரு பைசாவுக்குக் கூட உபயோகம் இல்லை. இறை அன்பிற்கு முன் வேறெதனைப் பற்றிய கவலையும் இருக்கக் கூடாது. மேலும் எவ்வித அச்சமும் இருக்கக் கூடாது.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

அல்லாஹ்வுக்கு முழுமையாகப் பொருந்தி எந்த புகாரும் இல்லாத தருணத்தில் அந்த தனிப்பட்ட அன்பு பிறக்கிறது. மேலும் எதுவரை இறைவனோடு தனிப்பட்ட அன்பு உருவாகவில்லையோ ஈமான் மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளது. ஆனால் தனிப்பட்ட அன்பு உருவாகி விட்டால் மனிதன் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பில் வந்து விடுகிறான். மேலும் இந்த தனிப்பட்ட அன்பை துஆவின் மூலமாகப் பெற வேண்டும். எதுவரை இந்த அன்பு உருவாகாதோ மனிதன் நஃப்ஸே அம்மாராவின் கீழ் இருக்கின்றான். மேலும் அதன் பிடியில் சிக்கிக் கொள்கிறான். மேலும் நஃப்ஸே அம்மாராவிற்கு கீழே இருக்கக் கூடியவர்களின் ஒரு சொல் வழக்கு பஞ்சாபியில் கூறினார்கள். அதன் பொருள்: 'இந்த உலகம் இனிமையானதாகும். மறுமை வருமோ? வராதா? நம்ம எங்க பார்த்திருக்கிறோம்.' இவர்கள் மிகவும் அபாயகரமான நிலையில் இருக்கிறார்கள். இரண்டாவது நிலை, லவ்வாமா ஆகும். லவ்வாமாவில் உள்ளவர்கள் ஒரு நேரம் மூஃமின்களாகவும், ஒரு நேரம் காஃபிர்களாகவும் உள்ளனர். ஒரு நேரம் இறை நேசராகவும், ஒரு நேரம் ஷய்த்தானாகவும் ஆகி விடுகின்றனர். மேலும் கீழுமான நிலையாக இருக்கிறது. இவர்களுக்கு ஒரே நிலை இருப்பதில்லை. ஏனென்றால் அவர்களுக்கு நஃப்ஸோடு சண்டை ஆரம்பமாகிறது. அதில் அவர்கள் சில நேரம் வெற்றி கொள்கிறார்கள். சில நேரம் தோற்று விடுகிறார்கள். எனினும் அவர்கள் புகழப்படக்கூடிய இடத்தில் இருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் நன்மைகளையும் செய்கின்றனர். மேலும் அவர்களின் உள்ளத்தில் இறை பயமும் இருக்கிறது. ஆனால் நஃப்ஸே முத்மயின்னாவைச் சார்ந்தவர்கள் முற்றிலும் வெற்றி பெற்றவர்களாவர். அவர்கள் அனைத்து விதமான அபாயத்திலிருந்து வெளியே வந்து அமைதியான இடத்தை அடைகிறார்கள். மேலும் ஷய்த்தான் சென்றடைய இயலாத அமைதியின் இல்லத்தில் இருக்கிறார்கள்.

***பிறகு ஒரு மூஃமினின் இறை நேசத்தின் தரத்தைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

மூஃமினின் நிறம் நேசரின் நிறமாகும். மேலும் அவன் தன் நேசத்தில் உண்மையானவனாக இருக்கிறான். மேலும் அவன் தான் நேசிக்கக்கூடியவருக்காக அதாவது, இறைவனுக்காக முழுமையான விசுவாசம், அன்பு மற்றும்

உயிரை மாய்த்து விடக்கூடிய உணர்வை தன்னுள் கொண்டுள்ளான். மேலும் பணிவுடன் நிலைநிற்கிறான். உலக இன்பங்கள் எதுவும் அவனுக்கு ஓர் இன்பமாகவே இருப்பதில்லை. அவனுடைய ரூஹ் அந்த இறை அன்பிலேயே வளர்கிறது. எந்த தியாகம் செய்யவும் அவன் பயப்படுவதில்லை. மேலும் நேசிக்கப்படக்கூடியவனின் தரப்பிலிருந்து எந்த கவனிப்பும் இல்லை என்று அவன் உணர்ந்தாலும் அவன் பயப்படுவதில்லை. அந்த தரப்பிலிருந்து அமைதி தெரிய வந்தாலும் அவர் ஒருபோதும் தைரியத்தை இழந்து விடுவதில்லை. எப்போதும் அடியை முன்னெடுத்தே வைக்கிறான். மேலும் அதிகமதிகம் உள்ளத்தின் வேதனையை உருவாக்கிக் கொண்டே செல்கிறான். இந்த இரண்டும் இருப்பது மிகவும் அவசியமானதாகும். மூஃமின் நேசராக மாறி இறை அன்பில் முழுவதுமாக மூழ்கி விட வேண்டும். மேலும் அன்பு முழுமையானதாக இருக்க வேண்டும். அதில் உண்மையான உணர்வு இருக்க வேண்டும். அன்பின் உடன்படிக்கையில் உறுதியான பாதத்தோடு நிலைநிற்றல் எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்றால், எந்தவொரு துக்கமும் அசைத்திட இயலக் கூடாது. நேசிக்கப்படக்கூடியவர்களின் தரப்பிலிருந்து எப்போதாவது அமைதியோ, கவனக்குறைவோ இருந்தால் இரு வகையான வலி இருக்க வேண்டும். ஒன்று, அல்லாஹ்வின் மீதுள்ள அன்பின் வலி. இரண்டாவது, ஒருவருடைய கஷ்டத்தின் போது உள்ளத்தில் வலி எழ வேண்டும். மேலும் அவரின் நன்மைக்காக உருக்கம் ஏற்பட வேண்டும். அவருக்கு உதவி செய்ய ஒரு நிம்மதியற்ற நிலை உருவாக வேண்டும். இறைவனுடைய அன்பிற்காக இருக்கக்கூடிய விசுவாசம், வலி இருக்கிறதோ அத்தோடு உறுதியான நிலைநிற்றலும் இருக்கிறது. அது மனிதனை மனிதத் தன்மையிலிருந்து பிரித்து இறைத்தன்மையின் நிழலில் கொண்டு வந்து போடுகிறது. எதுவரை அதன் எல்லை வரை வலியும், அன்பும் சென்றடையவில்லையோ, எதுவரை அல்லாஹ் அல்லாதவர்களில் மனிதன் மூழ்கிக் கிடக்கிறானோ அதுவரை மனிதன் அபாயகரமான நிலையில் இருக்கிறான். மனிதன் அல்லாஹ் அல்லாதவர்களிலிருந்து முற்றிலும் விலகாதவரை அந்த அபாயத்திலிருந்து தப்பிப்பது கடினமாகும். மேலும் அவனது விருப்பத்தில் நுழைவதும் கஷ்டமாகும். மேலும் இறைவனது படைப்பின் மீது ஒரு கருணையுள்ள தாய் தன் குழந்தைக்கு உள்ளத்தில் ஒரு உண்மையான உணர்வை கொண்டுள்ளது போன்று கருணை காட்ட வேண்டும். அதாவது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து முற்றிலும் தொடர்பை துண்டித்து விடுவது. இரண்டாவது, இறைவனின் படைப்பினங்கள் மீதும் உள்ளத்தில் வலி இருக்க வேண்டும். இது இறை நேசனாகிய ஒரு மூஃமினின் உள்ளத்தில் இருக்கிறது.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

எப்போது அவனைப் பற்றி தெரிய வருமோ அப்போதுதான் அல்லாஹ்வோடு வலுவான, தூய அன்பான தொடர்பு ஏற்பட இயலும். உலகம் இதுபோன்ற சந்தேகங்களால் சீரழிந்து விட்டது. அதிகமானவர்கள் வெளிப்படையாகவே நாத்திகர்களாக மாறி விட்டனர். மேலும் ஒரு சிலர் எப்படிப்பட்டவர்கள் என்றால் நாத்திகராக ஆகவில்லை. ஆனால் அவர்களின் நிறத்தோடு ஒன்றிணைந்து விட்டார்கள். மேலும் இதன் காரணமாக மார்க்கத்தில் சோம்பேறிகளாகின்றனர். இதன் சிகிச்சை என்றால் அவர்கள் இறைவனிடம் துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும். அதன் மூலம் அவர்களின் மஃரிஃபத் அதிகமாக வேண்டும். மேலும் உண்மையாளர்களோடு இருக்க வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்வின் வல்லமையின் புத்தம்புதிய அடையாளங்கள் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். பிறகு அவர்கள் எப்படி விரும்புவார்களோ, மேலும் எந்த வழியில் விரும்புவார்களோ மஃரிஃபத்தை அதிகமாக்கி விடுவான். மேலும் ஞானத்தை வழங்குவான். மேலும் உள்ளம் நிம்மதி அடைந்து விடும். இது முற்றிலும் உண்மையானதாகும். அதாவது எந்த அளவு இறைவன் மற்றும் அவனின் மேன்மையின் மீது நம்பிக்கை இருக்குமோ அந்த அளவே அல்லாஹ்வின் அன்பும், பயமும் இருக்கும். இல்லையென்றால், கவனக்குறைவின் நாட்களில் குற்றங்கள் செய்யத் துணிந்து விடுவான். அல்லாஹ்வுடன் அன்பு, அவனது மகத்துவம் மற்றும் அவனது கடினத்தின் பயம் இந்த இரண்டும் எப்படிப்பட்டதென்றால் இதன் மூலம் பாவங்கள் எரிந்து விடுகின்றன. இது இயற்கைச் சட்டமாகும். அதாவது மனிதன் எந்தப் பொருள்களிலிருந்து பயப்படுகிறானோ அதிலிருந்த விலகி இருக்கிறான். உதாரணமாக, நெருப்பு எரித்து விடும் என்று தெரிந்தால் நெருப்பில் கையை விடுவதில்லை. அல்லது உதாரணமாக, இன்ன இடத்தில பாம்பு இருக்கிறது என்று தெரிந்தால் அந்த வழியாகச் செல்லமாட்டான். இதுபோன்றே பாவத்தின் விஷம் அவனை அழித்து விடும் என்ற அறிவு இருந்தால், மேலும் அல்லாஹ்வின் மகத்துவத்தைக் கண்டு பயந்து மேலும் அவன் பாவத்தை விரும்புவதில்லை. மேலும் பாவத்திற்கு கடினமான தண்டனை கொடுக்கிறான் என்ற நம்பிக்கை இருக்கும் என்றால், அவனுக்கு பாவம் செய்யும் தைரியம் வராது. பிறகு பூமியில் மரணித்தவரைப் போன்று நடக்கிறான். அவனுடைய ரூஹ் எப்போதும் இறைவனிடம் இருக்கிறது.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

எப்போது இறைவனது அன்பின் நெருப்பில் விழுந்து தன் முழு இருப்பையும் எரித்து விடுகிறாரோ அந்த அன்பின் மரணம் அவனுக்கு ஒரு புதிய வாழ்க்கையை வழங்குகிறது. அன்பும் ஒரு நெருப்பாகும். மேலும் பாவமும் ஒரு நெருப்பாகும் என்பதை உங்களால் புரிய இயலாதா? ஆக இறை அன்பின் நெருப்பு பாவத்தின் நெருப்பை அணைத்து விடுகிறது. இதுவே இரட்சிப்பின் வேர் ஆகும்.

***குறிப்பாக ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

இறைவன் சாதாரண முறையில் அல்லாமல், அடையாளங்களுடன் முழுமையான இறையச்சம் உடையவரை கஷ்டத்திலிருந்து காப்பாற்றுகிறான். ஒவ்வொரு சூழ்ச்சிக்காரனும், அறிவிலியும் இறையச்சம் உடையவருக்கான வாதம் செய்கிறான். ஆனால் எவர் இறை அடையாளத்தின் மூலம் நிரூபணமாகிறாரோ அவர் தான் உண்மையில் இறைச்சம் உடையவராவார். ஒவ்வொருவரும் நான் இறைவனோடு அன்பு காட்டுகிறேன் என்று கூற இயலும். ஆனால் அவருடைய அன்பு வானத்தின் அடையாளங்களின் மூலம் நிரூபணமாகிறதோ அவரே உண்மையான அன்பு கொள்கிறார். மேலும் ஒவ்வொருவரும் தனது மார்க்கம் உண்மையானது எனக் கூறுகின்றனர். ஆனால் அவருக்கு இவ்வுலகில் ஒளி கிடைக்கிறதோ அவருடைய மார்க்கமே உண்மையானதாகும். மேலும் ஒவ்வொருவரும் எனக்கு இரட்சிப்பு கிடைக்கும் எனக் கூறுகின்றனர். ஆனால் எவர் இவ்வுலகிலேயே இரட்சிப்பின் ஒளியைக் காண்கிறாரோ அவரே தன் கூற்றில் உண்மையாளர் ஆவார். நீங்கள் இறைவனின் அன்பிற்குரியவராக ஆக முயற்சி செய்யுங்கள். அதன் மூலம் நீங்கள் எல்லா இன்னல்களிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும்.

பிறகு இறைவனின் அன்பை நம் உள்ளங்களில் நிலைநிறுத்துவதற்கு எவ்வாறு அன்னார் அறிவுரை வழங்கியுள்ளார்கள் என்பது பற்றி ஓர் உதாரணம் தருகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:

எவ்வளவு நற்பேறிழந்த மனிதன். அவனுக்கு இதுவரை இதுகூட தெரியவில்லை. அவனது ஓர் இறைவன் இருக்கிறான். அவன் எல்லா பொருட்களின் மீதும் வல்லமையுள்ளவன் ஆவான். நமது சொர்க்கம் நமது இறைவனாவான். நமது மேலான இன்பங்கள் நமது இறைவனில் இருக்கின்றன. ஏனென்றால் நாம் அவற்றைப் பார்த்துள்ளோம். மேலும் அதில் ஒவ்வொரு சிறப்பம்சத்தையும் கண்டோம். இந்த செல்வம் உயிரைக் கொடுத்து வாங்க நேரிட்டாலும் வாங்குவதற்கு தகுதி வாய்ந்ததாகும். மேலும் இந்த வைரம் தன்னை முற்றிலும் இழந்து வாங்க நேரிட்டாலும் இது வாங்கத் தகுதி வாய்ந்ததாகும். பாக்கியமற்றவர்களே! இந்த நீரூற்றின் பக்கம் ஓடுங்கள். அது உங்களை திருப்திப்படுத்தும். இது உன்னை காப்பாற்றக்கூடிய வாழ்க்கையின் நீரூற்றாகும். நான் என்ன செய்வேன்? எவ்வாறு இந்த நற்செய்தியை உள்ளங்களில் பதிய வைப்பேன்? இது உங்களுடைய இறைவனாவான் என்பதை மக்கள் கேட்பதற்காக எவ்வாறு கடை வீதிகளில் அறிவிப்பேன்? மேலும் கேட்பதற்கு மக்களின் காதுகள் திறப்பதற்கு எந்த மருந்தைக் கொண்டு சிகிச்சை செய்வேன். நீங்கள் இறைவனுக்காக ஆகி விட்டால் நிச்சயமாக புரிந்து கொள்ளுங்கள். இறைவன் உங்களுடையவனே ஆவான். நீங்கள் தூங்கிக் கொண்டிருந்தாலும் இறைவன் உங்களுக்காக விழித்திருப்பான். நீங்கள் எதிரிகளை அறியாமல் இருந்தால் இறைவன் அதை பார்ப்பான். மேலும் அவனின் திட்டங்களை முறியடிப்பான். உங்களுடைய இறைவனில் எப்படிப்பட்ட ஆற்றல்கள் இருக்கிறது என்பதை நீங்கள் இதுவரை அறியவில்லை. அறிந்திருந்தால் நீங்கள் உலகிற்காக கடினமான கவலைக்குள்ளாக்கக்கூடிய நாள் ஒருபோதும் வராது. தன்னிடம் ஒரு கருவூலம் உடைய ஒரு மனிதர் அவர் ஒரு பைசா வீணாவதால் அழுகிறாரா? கத்துகிறாரா? மேலும் அழியப் போகிறாரா? பிறகு உங்களுக்கு அந்த கருவூலத்தைப் பற்றி அறிவிருந்தால் இறைவன் எப்போதும் உங்களுக்கு பலன் அளிக்கக்கூடியவன் என்று அறிந்திருந்தால் நீங்கள் உலகிற்காக ஏன் இவ்வாறு ஆகிறீர்கள்? இறைவன் ஒரு அன்பான கருவூலம் ஆவான். அதற்கு கண்ணியம் அளியுங்கள். அவன் உங்களின் ஒவ்வொரு அடியிலும் உங்களது உதவியாளன் ஆவான். அவன் அல்லாமல் நீங்கள் ஒன்றுமில்லை. உங்களுடைய காரணிகளும், திட்டங்களும் ஒன்றுமில்லை. மற்ற சமுதாயங்களைப் பின்பற்றாதீர்கள். அவர்கள் முற்றிலுமாக காரணிகளில் வீழ்ந்து விட்டனர். எவ்வாறு பாம்பு மண்ணை திண்கிறதோ அதுபோன்று அவர்கள் காரணிகளின் மண்ணைத் திண்கிறார்கள். எவ்வாறு நாய் உயிரற்றதை உண்கிறதோ அதுபோன்று அவர்கள் மரணித்தவற்றின் மீது வாய் வைக்கின்றனர். இறைவனிடமிருந்து வெகு தொலைவில் சென்று விட்டனர். மனிதனை வணங்கினார்கள். பன்றியை உண்டார்கள். மதுவை தண்ணீரைப் போன்று உபயோகித்தார்கள். மேலும் அளவுக்கு அதிகமாக காரணிகளின் மீது விழுந்ததன் காரணமாக, மேலும் இறைவனிடம் ஆற்றல் வேண்டாததன் காரணமாக அவர்கள் மரணித்து விட்டனர். மேலும் எவ்வாறு ஒரு கூட்டிலிருந்து புறா பறந்து செல்வதைப் போன்று வானத்தின் ரூஹ்

அவர்களிடமிருந்து வெளியேறி விட்டது. அவர்களுக்குள் ஓர் உலக வாள் உள்ளது. அது அவர்களின் அனைத்து அக உறுப்புகளையும் அழித்து விட்டது. ஆக நீங்கள் அந்த வாளிடமிருந்து அஞ்சுங்கள்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

எந்த இறைவனை அடைவதே இரசிப்போ அந்த இறைவனை அடையாளம் கண்டு கொள்ள அதிகமாக முயற்சி செய்யுங்கள். அவன் கிடைப்பது விடுதலை ஆவதாகும். தூய்மையான உள்ளத்தோடும், அன்போடும் அவனை தேடக்கூடியவனின் மீதே அவன் வெளிப்படுகிறான். எவர் அவனுக்காக ஆகி விடுகிறாரோ அவனின் மீதே அவன் வெளிப்படுகிறான். தூய்மையான உள்ளங்கள் அவனின் அரியணை ஆகும். எந்த நாவுகள் பொய் மற்றும் ஏச்சுப்பேச்சுகளிலிருந்து தூய்மையாக இருக்கின்றனவோ அவை அவனின் வஹியின் இடமாகும். அவனது விருப்பத்தைப் பெற மாய்ந்து விடக்கூடியவர் அவனின் ஆற்றலின் வெளிப்பாடாக இருக்கிறார்.

அல்லாஹ் நமக்கு அந்தத் தரங்களை அடைவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! எதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மை பார்க்க விரும்புகிறார்களோ அல்லாஹ் நாம் தூய்மையுடன் அல்லாஹ்வின் பால் குனிபவர்களாக மேலும் அன்பு கொள்பவர்களாக ஆவோமாக! அன்பை பெற்று நம் வாழ்க்கையின் அங்கமாக ஆக்குபவர்களாவோமாக! மேலும் அவனுடைய விருப்பத்தின் சொர்க்கத்தில் செல்லக்கூடியவர்களாவோமாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **04.04.2014**

Translated by : Maulavi M.B. TAHIR AHMAD Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456